# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

## கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

# இலங்கை சேதன தரத்திற்கமைவாக (SLS 1324:2018) சேதன சான்றிதழைப் பெற்றுக்கொள்ள பயிர்ச் செய்கையாளர்களுக்கு/ பதனிடுபவர்களுக்கு நிதியுதவி வழங்கல்

உள்நாட்டு பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் பதனிடுபவர்களுக்கு இலங்கை சேதன தரம் அதாவது SLS 1324:2018 அமைவாக, சேதன சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மூலம் நிதியுதவி நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. SLS 1324:2018 சேதன சான்றிதழ் வழங்கல் தொடர்பாக தர அங்கீகாரச் சபையின் அனுமதியைக் கொண்டுள்ள சான்றிதழ் வழங்கும் நிறுவனமொன்றின் மூலம் சேதன சான்றிதழ் பெற்றுத்தரப்படும்.

**குறிக்கோள்**

1. சிறியளவிலான கமத்தொழிலாளர்கள் மத்தியில் இலங்கை சேதன தரத்தை (SLS 1324:2018) ஊக்குவித்தல்
2. சேதனப் பயிர்ச்செய்கை/ பதனிடும் தயாரிப்புகள் குறித்த தரத்திற்கமைவாக உற்பத்தி செய்தல், பதனிடுதல் மற்றும் லேபிள் இடுவதை திட்டமிடல்
3. சேதன தயரிப்புக்கள் தொடர்பாக பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதன் மூலம், உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை மேம்படுத்தல்.
4. பயிர்ச்செய்கை நிலத்திலிருந்து சந்தை வரையான வழங்கல்கள் மற்றும் பெறுமதி சேர்ப்புகளில் வெளிப்படைத் தண்மையை ஏற்படுத்தல்.
5. ஏற்றுமதி வர்த்தகம் தொடர்பாகத் தேவைப்படும் சேதன தரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, ஏற்புடையதாக உள்ளூர் சேதன கமத்தொழிலாளர்கள்/ பதனிடுபவர்களின் நிலையை மேம்படுத்தல்.
6. இலங்கை சேதன தரம் SLS 1324:2018 தொடர்பாக, ஏற்றுமதிச் சந்தைகளில் பரஸ்பர அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

**நிதியுதவி பெற்றுத்தரப்படும் பயிர் விளைபொருட்கள்:**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்புகள் சேதனமாக பயிரிடுவதற்கு மற்றும் பதனிடுவதற்கு ஆர்வங் காட்டும் இலங்கை கமத்தொழிலாளர்கள் மற்றும் பதனிடுபவர்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

- ❖ அரிசி
- ❖ மூலிகைச் செடிகள்
- ❖ தேங்காய் உள்ளீடு தொடர்பான தயாரிப்பு
- ❖ பழவகைகள்
- ❖ தானியங்கள்
- ❖ பச்சைக் கீரை வகைகள்.
- ❖ மரமுந்திரிகை
- ❖ வாசனைத் திரவியங்கள்
- ❖ மரக்கறி

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் சேதன சான்றிதழ் வழங்கும் செயற்பாட்டில் (SLS 1324:2018 பிரகாரம்) ஏற்படும் பரிசீலனைச் செலவு, வளவு பரிசீலனை மற்றும் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்படும் அடிப்படைச் செலவு என்பன பெற்றுத்தரப்படும்.

விண்ணப்பங்களை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இணையத்தளமான www.srilankabusiness.com (Under 'announcement') இலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் தொடர்பாக, திருமதி, எஸ்.எம்.டீ மதுமாலியை அழையுங்கள் (நீடிப்பு 235, 011-2300705-11) மின்னஞ்சல்: madhumali@edb.gov.lk

விண்ணப்பங்கள், 2020 ஜுலை 17 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பணிப்பாளர், கமத்தொழில் ஏற்றுமதிப் பிரிவு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலக்கம் 42, நவம் மாவத்தை, கொழும்பு - 02 இற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வது நேர்முகத் தேர்வு சபையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.


**தலைவர்,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**இலக்கம். 42, நவம் மாவத்தை, கொழும்பு-02.**
தொலைபேசி: 011-2300705-11, பெக்ஸ்: 011-2347872
www.srilankabusiness.com